**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

ந.க.எண்.2503/ஆ5/2025, நாள்.22/09/2025

.....

பொருள் பள்ளிக் கல்வி – போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு இணையவழி செயல்பாடுகள் மாணவர்கள் கலந்து கொள்ளுதல் – தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல் – சார்பு

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.059453/எம்1/இ1/2025, நாள். 17.09.2025

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, போதை பழக்கம் இல்லா இந்தியா திட்டத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம் 13.08.2025 முதல் 31.10.2025 வரை கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது எனவும் பள்ளி மாணவர்களிடையே போதை பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்துவதை உறுதிசெய்கிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை MyGov Platform–இல் "Towards a Tobacco Free Generation School Challenge" என்ற தலைப்பில் தேசிய அளவிலான போதை பொருள் விழிப்புணர்வு தொடார்பான போட்டிகள் நடத்திட திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக பதாகைகள் உருவாக்கல் (Poster Making) கவிதைப்போட்டி, போதைப்பொருள் எதிர்ப்பு நாடகம் போன்ற போட்டிகள் மூலமாக மாணவர்களிடம் போதைப்பொருள் எதிர்ப்பு அதனால் ஏற்படும் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி "போதைப்பொருள் இல்லா கல்வி நிறுவனங்கள்" (TOFEI)இல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்திட ஏதுவாக இப்போட்டிகளை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே அனைத்து வகைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை வினாடி –வினா மற்றும் பதாகைகள் உருவாக்கல் (Poster Making) கவிதைப்போட்டி, போதைப்பொருள் எதிர்ப்பு நாடகம் போன்ற போட்டிகளில் பெருவாரியான பள்ளிகளும் மாணவர்களும் கலந்து கொள்வதை உறுதி செய்திடவும், மேலும் போட்டிகள் சார்ந்த புகைப்படங்கள் https://innovateindia.mygov.in/portal என்ற இணை முகவரியில் பதிவேற்றம் செய்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள்,
   வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்–

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.